

சேலத்தில் கலைஞர் தொலைக்காட்சியின் பள்ளிகளுக்கு இடையே தமிழ் விளையாட்டு நிகழ்ச்சி செசன். 2 தொடக்கவிழாவை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கிவைத்து முதல் செசனில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி, மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., நிகழ்ச்சி அமைப்பாளர். ஜேம்ஸ் வசந்தன் ஆகியோர் இருந்தனர்.

### மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடன் –

# விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வாழ்வில் வெற்றி பெறுவீர்!

## திண்டுக்கல்லில் இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் - அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்துரை!

திண்டுக்கல், ஆக.12

திண்டுக்கல் மாவட்டத்தில் 16,002 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7.74 கோடி மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை தொடங்கி வைத்து, மாணாக்கர்கள் தன்னம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் கல்வி பயன்று வாழ்வில் வெற்றி பெற வேண்டும், என அமைச்சர் பெரியசாமி தெரிவித்தார்.



திண்டுக்கல் மாவட்டத்தில் பள்ளிகளில் மேல்நிலை முதலாமாண்டு படிக்கும் 16,002 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7.74 கோடி மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை, வி.கூத்தம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 10.08.2024 அன்று மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை அமைச்சர் பெரியசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, தலைமையில் வழங்கி தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், அமைச்சர் ஐ.பெரியசாமி, பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

உயர் கல்வியில் பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட “புதுமைப்பெண்“ திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 109 கல்லூரிகளில் 5,615 பயனாளிகள் தற்போது வரை பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் பெண்களின் உயர் கல்வியில் பெரும் முன்னேற் றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக உயர்கல்வியில் மாணவர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கும் பொருட்டு, ‘தமிழ்ப்புதல்வன்’ எனும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் மொத்தம் 5,112 மாணவர்கள் பயனடைகின்றனர். ஆத்தூரில் உள்ள கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 1000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மாதம் ரூ.1,000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

அந்த வகையில் மேல்நிலைக்கல்வி முதலாமாண்டு மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில், 2024-2025-ஆம் கல்வியாண்டில், திண்டுக்கல் கல்வி மாவட்டத்தில் உள்ள 88 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 4,975 மாணவர்கள், 5,970 மாணவிகள் என மொத்தம் 10,945 மாணவ, மாணவிகள் மற்றும் பழனி கல்வி மாவட்டத்தில் உள்ள 52 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 2,200 மாணவர்கள், 2,857 மாணவிகள், என மொத்தம் 5,057 மாணவ, மாணவிகள் என ஆக மொத்தம் மாவட்டத்தில் 140 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 7,175 மாணவர்கள் மற்றும் 8,827 மாணவிகள் என மொத்தம் 16,002 மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர்.

7,175 மாணவர்களுக்கு தலா ரூ.4,900 மதிப்பீட்டில் மொத்தம் ரூ.4.32 கோடி மதிப்பீட்டிலும், 8,827 மாணவிகளுக்கு தலா ரூ.4,760 மதிப்பீட்டில் மொத்தம் ரூ.3.42 கோடி மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் 16,002 மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் ரூ.7.74 கோடி மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இன்றைய தினம் வி.கூத்தம்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பில் பயின்று வரும் 13 மாணவர்கள் மற்றும் 21 மாணவிகள் என 34 மாணவ, மாணவிகளுக்கு முதற்கட்டமாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையில் வெற்றி, தோல்வி என்பது நிரந்தரம் இல்லை. மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் அளவிற்கு இடம் பிடிப்பதுதான் நிரந்தரம். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பாஸ்கரன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மாரி, மாவட்டக் கல்வி அலுவலர்(பொ) சண்முகவேல், ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் செல்வி, வீரக்கல் ஊராட்சி மன்ற தலைவர் இராஜேஸ்வரி, அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தருமபுரி மேற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி. ஆக. 12-

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்நாளைநடைபெறுகிறது என மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நாளை (13.08.2024 - செவ்வாய்க்கிழமை) காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில் காலை 10.30 மணியளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.மனோகரன், தலைமையிலும், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ.மணி, முன்னிலையிலும் நடைபெறும். அதுசமயம், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகளும், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும், ஒன்றிய கழக செயலாளர்களும், பேரூர் கழக செயலாளர்களும், மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்களும் அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்: 2026ல் நடைபெறும் சட்டமன்ற பொது தேர்தலையொட்டி செய்ய வேண்டிய பணிகள். இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் மகளிரணி உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக. கழக வளர்ச்சி பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி திடலில் 25 புதிய பேருந்துகளை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கொடியசைத்து துவக்கி வைத்தார். சிறுபான்மையினர் நலன் அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர். இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, பொதுக்குழு பஞ்ச நாதன், நகர மன்றத் தலைவர் தமிழ்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வகசிகாமணி, தே.முருகவேல், கல்பட்டு வி.இராஜா, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், தொ.மு.ச பொதுச் செயலாளர் சேகர், நிர்வாக பணியாளர்கள் சங்க பொதுச்செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், ஒன்றிய குழுத் தலைவர்கள் சச்சிதானந்தம், ஓம்சிவசக்திவேல், மாவட்ட பிரதிநிதி சி.எம்.எஸ் முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் வென்றுவிட்டார்!

# தமிழ் என்ற நிரந்தர வாகனத்தில் ஏறிக்கொண்டார்!

## “கலைஞர் 100 கவிதைகள் 100”-ஐ தொகுத்த கவிப்பேரரசு தமது அணிந்துரையில் அன்புக்காணிக்கை!

சென்னை, ஆக. 12-

“கலைஞர் 100, கவிதைகள் 100” நூலைத் தொகுத்து வெளியிட்ட கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தமது அணிந்துரையில் “கலைஞர் வென்றுவிட்டார். உடல் என்ற தற்காலிக வாகனத்திலிருந்து தமிழ் என்ற நிரந்தர வாகனத்தில் ஏறிக்கொண்டார்” என்று உள்ளம் உருகக் குறிப்பிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு தமது அன்புக் காணிக்கையைச் செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தமது அணிந்துரையில் “நூறு குயில்கள் பாடும் வனாந்திரம்” என்ற தலைப்பில் எழுதியிருப்பதாவது:-

**இது**

**உங்கள் கரங்களில் ஒரு குழந்தை போல் தவழும்**

**இதோ இது**

**இலக்கிய வரலாற்றில் மிகப்பெரிய ஆவணம்.**

இந்த முன்னுரையில் இலக்கிய நேர்மை தாண்டி நான் சற்றே உணர்ச்சிவசப்பட்டிருக்கிறேன் என்று கருதும் விமர்சகர்கள் வெளியேறி விடுங்கள். இந்த இடத்தில் உணர்ச்சிவசப்படாதவன் உணர்ச்சியின் நரம்புகள் அற்றவன்.

உள்ளம் பிரவாகம் கொள்ளவும், உணர்ச்சிகள் குமிழியிடவும் காரணங்கள் உண்டு. நானறிந்த இந்திய அரசியல் பெருவெளியில் ஓர் இனக்குழுத் தலைவனுக்கோ, இந்திய தேசியத் தலைவனுக்கோ தான் வாழ்ந்த காலத்தின் 100 கவிஞர்களால் பாடப்பட்ட பெரும்புகழ் கலைஞரைத் தவிர வேறெவருக்கும் வாய்த்ததில்லை என்றே தோன்றுகிறது.

ஓர் இயக்கத்தின் தலைவர், ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் என்ற அதிகார பிம்பத்துக்காக இந்தக் கவிஞர்களில் யாரும் பேனா அசைக்கவில்லை. மொழியும் மொழிசார்ந்த வகையிலும், திறமும் திறம்சார்ந்த வகையிலும், உழைப்பும் உழைப்பு சார்ந்த வகையிலுமே கலைஞரை இவர்கள் கொண்டாடிக் கூத்தாடுகிறார்கள்.

அரசு ஆணை பிறப்பித்து ஒரு கவிதை எழுதவியலாது. அவனவன் சிரசு ஆணை பிறப்பிக்காவிடில் கவிதையில் ஓர் அசைவும் அசையாது. அந்த வகையில் இந்த 100 கவிஞர்களும் ஏதோ ஒரு தளத்தில் குறிப்பாகத் தமிழ்த் தளத்தில் கலைஞரை நேசித்தவர்கள். அவரால் பயன்பெற்றவர்கள் என்பதைவிட அவரது சமூகப் பயனை உணர்ந்தவர்கள்.

**மணி முடியில் பதிக்கப்பெற்ற மாணிக்கங்கள்!**

பெரும் பெருமக்களின் கவிதைகளால் இந்தத் தொகுப்பு வரலாற்று வசீகரம் பெறுகிறது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம், கவியோகி சுத்தானந்த பாரதியார், டாக்டர் மு.வரதராசனார், பெரும்புலவர் சி.இலக்குவனார், கவியரசி சௌந்தரா கைலாசம், இலக்கிய விஞ்ஞானி குலோத்துங்கன் என்ற வா.செ.குழந்தைசாமி, உச்ச நீதிமன்ற நீதியரசர் ச.மோகன், உவமைக் கவிஞர் சுரதா, பெரும்பாட்டுப் புலவர் அ.மருதகாசி, கவியரசர் கண்ணதாசன், பெருங்கவிஞர் முடியரசன், அறிஞர் அவ்வை நடராசன், கவிக்கோ அப்துல் ரகுமான் போன்ற இந்த நூற்றாண்டின் மணிமுடியில் பதிக்கப்பெற்ற மாணிக்கங்களெல்லாம் கவிபாடியிருக்கின்றன கலைஞரை.

இதில் மிகப்பெரிய வியப்பும் சிறப்பும் என்னவெனில் மூன்று தமிழ் கண்ட கலைஞர், நான்கு தலைமுறைகளால் பாடப்பட்டிருக்கிறார். 1924இல் பிறந்த கலைஞரை அவருக்கு முன் பிறந்தவர்களும், சமகாலத்தில் பிறந்தவர்களும், அப்படிப் பிறந்தவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் கவிதை பாடியிருக்கிறார்கள் என்பதே என்னை உணர்ச்சி வசப்படுத்தியதற்குக் காரணம்.

இத்துணை தலைமுறைகளின் கவனத்தை ஒரு தலைவன் அல்லது படைப்பாளன் ஈர்த்திருக்கும் இலக்கிய விந்தை வேறெந்த மாநிலத்துக்கும் இல்லாத தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரிய தனிப் பெருமை என்பது கலைஞரால் தமிழுக்குக் கிடைத்த ஒரு கர்வ காரணமாகும்.

அரசர்களைப் புலவர்கள் பாடுவது சங்க காலத்து நெடுமரபு. புலவர்களால் பாடப்படுவது அரச மாண்பு. வஞ்சினம் ஏற்கிற நெடுஞ்செழியப் பாண்டியன் ‘புலவர் பாடாதொழிக என் நிலவரை’ என்பதை உச்சமாக வைக்கிறான். புலவர்களால் பாடப்பட்டவர்கள் மட்டும்தான் இலக்கிய வரலாற்றில் எச்சமாய் நிற்கிறார்கள். அப்படிப் பாடப்பட்ட அரசர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் பாடப்பட்டவர்கள் சிலரே. நூற்றுக்கு மேற்பட்டவர்களால் பாடப்பட்ட பெருங்கீர்த்தி பெற்றவர்கள் என் சிற்றறிவின் எல்லைக்குச் சிக்கவில்லை.

அதியமான் நெடுமாண்அஞ்சியும் அவன் மகன் பொகுட்டெழினியும் அவ்வையாராகிய ஒரே புலவரால் பாடப்பட்டதுண்டு. ஒரே அரசன் பெரும்பான்மையான புலவர்களால் பாடப்பட்ட ஆதாரங்கள் இல்லை. அந்த வகையிலும் கலைஞர் பெரும்பேறு பெற்றவராகவே அறியப்படுகிறார்.



இந்தத் தொகுப்பின் 100 கவிதைகளையும் பயின்று முடிக்கும் ஆய்வாளர்கள் பல்வேறு பொருண்மைகளை உற்று நோக்கக்கூடும். மாறிக்கொண்டே வரும் மொழி, மறைந்துகொண்டே வரும் இலக்கிய வடிவங்கள், சமூகப் போக்குகள், வரலாற்றின் மடைமாற்றங்கள், முன்னோர் கவிதைகளுக்கும் பின்னோர் கவிதைகளுக்குமான மாறுபட்ட கவிதை உத்திகள் இவற்றை ஆய்வு செய்து உணர்வதற்கும் உணர்த்துவதற்கும் இந்தத் தொகுப்பின் பருப்பொருள்கள் பயன்படும்.

இத்துணை கவிஞர்கள் பாடப்பட வேண்டுமெனில் ஒரு தலைவன் அவர்களுக்குப் பாடுபொருள் தந்திருக்க வேண்டும். கலைஞர் குறித்த பாடுபொருளைக் காலமே தந்தது.

ஆதிக்க சாதிகளுக்கும் அடிமைப்பட்ட சாதிகளுக்குமான போராட்ட காலத்தில் –

இந்திய தேசியத்திற்கும் தமிழ் தேசியத்திற்குமான போர்க் காலகட்டத்தில் -

வைதீகத்துக்கும் பகுத்தறிவுக்குமான தத்துவ யுத்த காலத்தில் -

சினிமா என்ற தொழில்நுட்பம் கலாசார மாற்றத்துக்கு கைக்கருவியான காலத்தில் -

தமிழ் சமஸ்கிருதம் என்ற மொழிப் போர் மும்முரப்பட்ட காலத்தில் -

தன் அரசியலை நிகழ்த்திக் கொள்ளுமாறு காலம் கலைஞரைப் பணித்தது. இந்தக் களங்களுக்கான ஊடுபொருள் என்னவோ அதுதான் கலைஞர் கவிஞர்களுக்குத் தந்த பாடுபொருள்.

பெரியாரின் சுடுமொழியால் சற்றே அந்நியப்பட்டு நின்ற ஒரு தலைமுறையும்கூட, கலைஞரின் கனிமொழியால் கலைமொழியால் அவர் நிழல்தொடும் தூரத்தில் நெருங்கி வந்தது.

பெரியாரை எடுத்து அண்ணாவைக் குழைத்துத் தன் நறுமணத்தை அவர் தடவிக்கொடுத்த தமிழ், எல்லா தலைமுறைகளுக்கும் ஏற்புடையதாயிற்று. அதனால்தான் டாக்டர் மு.வ., இலக்குவனார், குலோத்துங்கன் உள்ளிட்ட கல்வியாளர் உலகமும், பாரதிதாசன், சுத்தானந்த பாரதியார், நாமக்கல் கவிஞர் உள்ளிட்ட கவிஞர் உலகமும், சுரதா, கண்ணதாசன் முடியரசன் உள்ளிட்ட காரிகை கற்ற கவிஞர்களும், அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், வைரமுத்து உள்ளிட்ட மரபில் ஊறி மரபை மீறிய புதுக் கவிஞர்களும், சௌந்தரா கைலாசம், கனிமொழி, தமிழச்சி தங்கப்பாண்டியன் உள்ளிட்ட பெண்பாற் கவிஞர்களும், யாப்பறியாத நவீனக் கவிஞர்களும் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட பன்னாட்டுக் கவிஞர்களும் இத்தொகுப்பில் கலைஞரைப் போற்றிப் பாடியிருக்கிறார்கள். அத்துணை கவிஞர்களுக்கும் கலைஞரின் உயிரோட்டமான வாழ்க்கை உள்ளடக்கம் தந்திருக்கிறது.



கவிப்பேரரசு
**வைரமுத்து**

மொழிப்போரென்ன! சமூக நீதியென்ன! ஆதிக்க ஒழிப்பென்ன! வைதீகத் தகர்ப்பென்ன! பகுத்தறிவுப் பார்வையென்ன! இனமொழி மீட்பென்ன! திருக்குறள் காப்பென்ன! கலாசாரப் புரட்சியோடு களங்கண்டு மீண்ட காயங்களென்ன!

**ஒரு பெருங்கடமை செய்த நிறைவில் நிம்மதியுறுகிறேன்!**

இலவசக் கல்வியென்றும், பெண்களுக்குச் சொத்துரிமை என்றும், பிச்சைக்காரர் ஒழிப்பு என்றும், குடிசை மாற்று வாரியம் என்றும், வேளாண் குடி மீட்சி என்றும், தமிழுக்கு முன்னுரிமை என்றும், தமிழ்நாட்டின் நவீனக் கட்டமைப்பு என்றும், தொழில்நுட்பப் புரட்சி என்றும், மாநில உரிமைக் குரல் என்றும் தமிழ்நாட்டுக்குச் சிறப்பும் வனப்பும் வழங்கிய செயல்திட்டங்களெல்லாம் அவர் பாவலர்களுக்குத் தந்த பாடுபொருள்களாயின. அதுதான் இந்தத் தொகுப்பின் பெருமைக்கொரு பெருங்காரணம்.

இத்தொகுப்பின் வாயிலாய் ஒரு பெருங்கடமை செய்த நிறைவில் நான் நிம்மதியுறுகிறேன்.

கலைஞர் நூற்றாண்டில் கவிஞர் நூற்றுவர் தீட்டிய கவிதைகளைத் தொகுத்து அவர் நினைவின் நீட்சிக்குப் படைக்கிறேன். தமிழ் ஆசான் என்று என்னால் என்றென்றும் அழைக்கப்பட்ட ஒரு தலைமகனுக்கு என் ஆற்றலுக்கு உட்பட்ட அன்புக் காணிக்கை இது.

இத்தொகுப்பை என் நெஞ்சோடு அணைத்துக்கொள்ள அவ்வளவு சுகமாக இருக்கிறது. நன்றியைக் கட்டிப்பிடித்துக் கண்மூடுவதுபோல் இருக்கிறது.

கவிதை கொடுத்த கவிஞர்கள் அனைவரையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். வெவ்வேறு வடிவங்கள்; வெளிப்பாடுகள். எந்தக் கவிதையும் சோடையில்லை. ஒவ்வொரு கவிதையிலும் மேற்கோள் காட்டுவதற்கு நல்ல வரிகள் நான்குண்டு.

கலைஞருக்கும் எனக்கும் 29 ஆண்டுகள் கால வித்தியாசம்; தமிழ் எங்களை ஒருசாலை மாணாக்கர்களாகவே உரையாட வைத்தது. அவர் பிறந்த ஊருக்கும் நான் பிறந்த ஊருக்கும் 305 கிலோ மீட்டர் தூர வித்தியாசம்; ஆனால், ஒருவீதிக் காரர்களைப் போலவே தமிழ் எங்களை உறவாட வைத்தது.

என் 17 படைப்புகளை அவரே தலைமையேற்று வெளியிட்டார். அவரது சில நூல்களுக்கு என்னை முன்னுரை எழுதவைத்தார். சிறிய இடைவெளிகளைத் தவிர, சற்றொப்ப 35 ஆண்டுகள் அவரும் நானும் ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் உரையாடல் நிகழ்த்தி இருக்கிறோம். என் நன்மை தீமைகளில் அவர் உணர்ச்சியோடு பங்கேற்றிருக்கிறார். எங்களுக்குள்ளான மெல்லிய ஊடல்கள் மூங்கில் இலைகளின் பனித்துளிகளைப்போல உடைந்திருக்கின்றன. அவருடைய மரணத்திற்குத் தவிர யாருக்கும் நான் அப்படி உடைந்து அழுததில்லை. இட்டு நிரப்ப முடியாத இடைவெளி பௌதிக அளவில் இன்னும் என் வாழ்வில் இருக்கிறது. அவரைப்போல் இன்னொருவர் எனக்கு வாய்க்கவில்லை; வாய்ப்பதில்லை. நிசப்தத்தின் கடைசிச் சொட்டிலும் அவர் ஒட்டிக்கொண்டிருப்பார்.

**பொய்யில்லை என்பதற்கு மெய்ச்சாட்சி!**

அவருக்கு நான் படைத்த எத்துணையோ கவிதைகளைவிட இந்தக் கவிதைத் தொகுப்பு சிறந்தது. அவரது சமகால சமூகத்தை இதில் திரட்டியிருக்கிறேன். எதிர்காலத்தில் எந்த நூற்றாண்டிலும் திராவிடப் பேரியக்கத்தின் வரலாற்றையும், கலைஞர் என்ற ஆளுமையின் உள்ளடக்கத்தையும் அறியத்துடிக்கும் ஒரு கூட்டம் இந்த நூலைத்தலைமேல்வைத்துக்கூத்தாடும்.

ஒருமுறை ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் எனக்குப் பிறகு என்னை யார் நினைத்திருக்கப் போகிறார்கள் என்று விரக்தியோடும் சலிப்போடும் ஒரு வினாத் தொடுத்திருந்தார் கலைஞர். மறுகணமே அவரைத் தொலைபேசியில் அழைத்து ‘எங்களையெல்லாம் மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள்’ என்று உடைந்த குரலில் சொன்னேன். அன்று நான் சொன்னது பொய்யில்லை என்பதற்கு மெய்ச் சாட்சி ‘கலைஞர் 100 கவிஞர்கள் 100’ என்ற இந்த அருந்தொகுப்பு.

**முதல்வரின் அணிந்துரை முத்துவேல் பேரன் பதித்த முத்தாகும்!**

நெஞ்சு நிறைந்திருக்கிறது.

கலைஞர் இந்த மண்ணுக்கு எழுதி வைத்த உயிர் உயில் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆவார்கள். அவரோடு கொண்ட உறவைப் பாதுகாப்பாகவும், பக்கபலமாகவும் உணர்கிறேன். இந்த நூலுக்கு அவர் அளித்திருக்கும் அணிந்துரை கலைஞர் மகுடத்தில் முத்துவேல் பேரன் பதித்த முத்தாகும். அவருக்கு நன்றி. அவர் நீடு வாழ்ந்து பீடுநடைபோட வாழ்த்துகிறோம்.

தொகுப்புக்குத் தொண்டு செய்த தம்பி ப.பாஸ்கரன், தம்பி வெ.கேசவன் இருவரும், அழகாக வெளியிட்ட டிஸ்கவரி வேடியப்பனும் என் பாராட்டுக்குரியவர்கள்.

வாழ்க்கை என்பது வேறொன்றுமில்லை, மரணத்துக்குப் பின்னும் மனிதன் வாழ்வதற்கான முயற்சியும் பயிற்சியும்தான்.

கலைஞர் வென்றுவிட்டார். உடல் என்ற தற்காலிக வாகனத்திலிருந்து தமிழ் என்ற நிரந்தர வாகனத்தில் ஏறிக்கொண்டார்.

கலைஞர் வாழ்கிறார்; வாழ்வார்.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து அணிந்துரையில் கூறியுள்ளார்.